# பரலோக பொக்கிஷங்கள்

## ஆவியானவர் நம்மீது தங்குவார்! [யோவான் 1:33]



### என்னை 'தள்ளாடவொட்டாத' தேவனுக்கே ஸ்தோத்திரம்!

கர்த்தர் "நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" என்ற வசனம் மிகுந்த ஆச்சரியமானது! கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத யாதொன்றையும் நான் சொல்லவில்லை, நான் செய்யவில்லை என்பதைவிட, வெற்றியின் இரகசியம் என்னவெனில் "அவர் என்னை சொல்லவிடவில்லை! அவர் என்னை செய்யவிட வில்லை!" என்பதே அந்த இரகசியம்! என் ஜீவியத்தில், ஊழியத்தில் "நான் தள்ளாடவில்லை என்பதைவிட, அவர் என்னைத் தள்ளாட விடவில்லை" என்பதே நாம் கிறிஸ்துவுக்குள் பெற்ற பாக்கியம்! இப்போது "கர்த்தர் மேல் என் பாரத்தை வைத்துவிடுவதே" எனது பேரின்பம்! (சங்.55:23).

ஆம், அவரே என்னை சுமந்து காப்பவர்! -tr



## கிறிஸ்துவின் ஆளுகையில் 'ஒழுங்கின் ஜீவியம்' உண்டு!

ஒழுங்கின் வாழ்க்கை வாழ்பவர்க்கும், ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்பவர்க்கும் இடையில், அவர்களின் சாதாரண அன்றாட ஜீவியத்திலேயே ஏராளமான வித்தியாசத்தை காண முடியும். 1) ஓர் ஒழுங்கின் வாழ்க்கை வாழ்பவர், தன்னுடைய உடைகளை 'அடுக்கி' வைப்பார். ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்பவரோ தன் உடைகளை அங்கும் இங்கும் போட்டுவைத்து விடுவார்! 2) ஓர் ஒழுங்கின் வாழ்க்கை வாழ்பவர், தான் உபயோகிக்கும் குளியல், கழிப்பறையை தானே கழுவி சுத்தமாக வைத்திருப்பார்! மற்றவர்களோ "வேறு யாராவது கழுவட்டும்" என அப்படியே விட்டு விடுவார்கள்! 3) ஓர் ஒழுங்கின் வாழ்க்கை வாழ்பவர், **தன் வேலைகளை திட்டமிடுவதும்..... திட்டமிட்டவைகளை செய்தும் முடிப்பார்!** மற்றவரோ தன் வேலைகளை ஒரு ஒழுங்கில்லாமல் தாறுமாறாக செய்வார்! 4) ஒழுங்கின் ஜீவியம் செய்பவர், தான் செல்லவேண்டிய இடங்களுக்கு எப்போதும் காலந்தாழ்த்தாமல் செல்வார்! குறிப்பாக சபை கூட்டங்களுக்கு சரியான நேரத்திற்கு வந்துவிடுவார்! ..... இவ்வாறாக, நம் முழு ஜீவியமும் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் வருவதே 'ஒழுங்கு செய்யப்பட்ட' வாழ்க்கை! என்பதை உணர்ந்து வாழ்ந்திடக்கடவோம்!

*-Ed*


**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜூலை 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A - Zaheer Hussain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## துன்பங்கள் 'நம் ஆவிக்குரிய சுரங்கமாய்' மாறக்கடவது!

*தன்னை பலியாய் தந்தவனே, பிறரை ஆசீர்வதித்திட முடியும்*

**ரா**ஜாவாகிய *தாவீது*, தன் சேனாதிபதிகளோடு செய்த யுத்தத்தில் சுதந்தரித்த பொக்கிஷங்களையெல்லாம், "கர்த்தருடைய ஆலயத்தை பரிபாலிக்கும்படி" கர்த்தருக்கே அர்ப்பணம் செய்தான் என, 1நாளாகமம் 26:26,27 வசனங்களில் நாம் காண்கிறோம்.

மிக வலிமையான ஆயுதவல்லமையாய் இருக்கும் "நிலக்கரி" பூமியின் ஆழத்தில் 'சுரங்கங்களாய்' தங்கியிருப்பதைக் காண்கிறோம். அந்த நிலக்கரி சுரங்கங்கள், முற்காலத்தில் எரிந்து அழிந்த மிகப்பெரிய காட்டு மரங்களால், பூமிக்கு கீழ் சுரங்கங்களாய் சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். அதுபோலவே, "உன்னதமான ஆவிக்குரிய வல்லமை" நமது ஜீவியத்தின் ஆழத்தில் நமக்குள் சேமித்து வைக்கப்படுகின்றன!

> **"அன்று 'காடுகள் எரிந்து' வலிமையான நிலக்கரி சுரங்கங்களாய் மாறியது போலவே "நம்மால் விளங்கிக்கொள்ள முடியாத ஏராளமான வாழ்வின் துயரங்கள்" நம் ஜீவியத்தின் ஆழத்தில் 'ஆவிக்குரிய வல்லமையாய்' தேக்கி வைக்கப்படுகின்றன, என்ற உண்மையை அறிந்து கொள்வோமாக!**

இவ்வாறு, 'நமக்குள் தேக்கி வைக்கப்பட்ட செல்வங்கள்' பிற்காலங்களில், பிறரை ஆசீர்வதிக்கும் செல்வங்களாய் மாறுவதையே நாம் காண்கிறோம். அந்த செல்வங்கள் அனைத்தும், நம் வாழ்வின் துன்பங்களை, தேவ தயவோடு ஜெயித்து சம்பாதித்த 'ஆவிக்குரிய செல்வங்களாய்' இருக்கின்றன!

'மோட்ச பிரயாணம்' புத்தகத்தில் தோன்றும் கிறிஸ்தியான், தன் வாழ்வின் உபத்திரவ பயணத்தில் அவன் மறுரூபமடைந்த வாழ்க்கையின் நிமித்தம் "தைரிய நெஞ்சன்" என பெயர் சூட்டப்பட்டான். அதைக்குறித்து விளக்கி கூறும் மோட்ச பயண புத்தகம், அவனைப் போலவே சோதனைகளின் வழியாய்

*கடினபாதையில் கடந்துவரும் மோட்ச பிரயாணிகளை அவன் உற்சாகப்படுத்தி, ஜெய கெம்பீரமாய் தேவ ராஜ்ஜியத்திற்குள் நடத்திச் சென்றிட, அவன் பெற்ற 'தைரிய நெஞ்சம்' வெகுவாய் உதவியது! இங்கு நீங்கள் விழிப்பாய் கவனிக்க வேண்டிய ஒரு ஜீவியம் உள்ளது. அது என்னவெனில், நமது தேவ ராஜ்ய பயணத்தில் சந்திக்கும் துன்பங்களை, ஒரு கிறிஸ்தவன் 'ஜெயங்கொண்டு' வாகை சூடினவனாய் இருக்கவேண்டும்! அவ்வாறு இல்லாமல், ஒரு கிறிஸ்தவன் மிகுந்த முறுமுறுப்போடும், ஆத்திரத்தோடும் சகித்து வாழ்ந்தான் என்ற ஜீவியத்தில், யாதொரு பயனும் இல்லை! என்ற உண்மையை ஒரு கிறிஸ்தவன் அறிந்திருக்க வேண்டும்.*

> **"**
> **பவுல் தன் ஜீவிய மற்றும் ஊழிய பயணத்தில் 'துக்கத்தை சுமந்து' முன்னேறிச் செல்லவில்லை! அவரோ தன் துன்பத்தின் மூலம் "வெற்றி நிறைந்த ஜெய துதியையே" சுமந்து வந்தார்!**

*__து__ன்பங்கள் இன்னமும் அதிகரித்தபோது, அவர் இன்னமும் அதிகமாய் தேவனை நம்பி சார்ந்து கொண்டு, இன்னும் அதிகமாய் ஆனந்ததுதி செலுத்தினார்! இவ்வளவு பசுமையானஜீவியத்தை "தான் அர்ப்பணித்த விசுவாச பலிபீடத்திலிருந்தே" பெற்றுக்கொண்டார் (பிலி.2:17). ஆகவே, இப்போது நம்மில் பொங்கிவரும் ஜெபமாய் இருக்க வேண்டியதெல்லாம் "ஓ கர்த்தாவே, இக்கால ஜீவியத்தில் எது சம்பவித்தாலும், அதன் மூலமாய் நான் உம் வல்லமையை பெற்றுக்கொள்ள அருள் செய்வீராக!" என்ற ஜெபமே, நம் இருதயத்தின் ஆழத்திலிருந்து வரும் ஜெபமாய் இருக்கக்கடவது!*

*ஒரு நல்ல அழகிய தோட்டத்தில் வாழ்ந்து விட்ட ஒரு தாசனை, அவனுடைய எஜமான் தூர இடத்திலிருக்கும் 'சிறைப்பட்டது போலிருக்கும்' ஒரு கூண்டு வாழ்க்கைக்குள் வைத்துவிட்டார்! இத்தனை மாறுபட்ட சூழ்நிலைக்குள் அவன் வந்துவிட்ட போதிலும், எஜமான் தன்னை அனுப்பிவிட்ட 'இந்த சிறைகூண்டு ஜீவியத்திலும்' நான் மகிழ்ந்து பாடுவேன் எனக்கூறி, சோர்வை அகற்றி உற்சாக மடைந்தான்!* **கூண்டிற்குள் சிறகடித்து மாய்வதைவிட, என் சிறகை உயர்த்தி** *என் எஜமானின் சித்தம் செய்திட மகிழ்ச்சியாய் பறந்து, பரம வாசலுக்கு நேராய் "வெற்றி கீதம்" நான் பாடுவேன்! என்றே அந்த தாசன் ஆர்ப்பரித்தான். ஆமென்!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

## 'தீராத வாஞ்சை கொண்டு' பரிசுத்தாவி அபிஷேகம் பெற்றேன்!

*அபிஷேகம் பெற்றிட, உங்கள் பாத்திரத்தை ஆயத்தப்படுத்துங்கள்*

*பரிசுத்தஆவி அபிஷேகம் பெற்றிட, அவர் நம்மில் வாசம் செய்யும் 'தகுதியான ஸ்தலமாய்' மாறுவதே மிக முக்கியமானதாகும். தமக்குரிய பாத்திரமாய் ஒருவனை அவர் ஆயத்தம் செய்யும்போது, அவனது இருதய யோசனைகளையே முதலாவதாக ஆராய்வார்! ஒரு சிலரிடம் ஒப்புரவாகும்படி கூறுவார்! எல்லா சுயநலன்களையும் விட்டுவிட கட்டளையிடுவார்! 'இயேசுவைப் போல் அல்லாத' பல்வேறு நமது நடை, உடை, பாவனைகளை மாற்றும்படி கூறுவார்! 'ஆதிகாலத்து பக்தியாய் மாறிவிட்ட' பிறரிடம் மன்னிப்பு கேட்பது.... பொருட்களைத் திரும்பக் கொடுப்பது ஆகிய ஒப்புரவாகுதலை கட்டளையிடுவார்!*

> **"இன்னும் நம்மில் மறைந்திருக்கிற தீமையான பகுதிகளையும் வெளியரங்கமாக்கி, நம்மை கழுவிக்கொள்ளச் செய்து, பரிசுத்தாவியானவர் தங்கி வாசம் செய்யும் தூய பாத்திரமாய் மாற்றுவார்!**

**தேவன் செல்லும் வழியில்** *நானும் செல்லுவேன் என உறுதியான தீர்மானம் எடுத்து, தங்களை தேவனுடைய கரத்தில் சரணடைந்தவர்களை மாத்திரமே, தேவன் தமது பரிசுத்த ஆவியினால் நிரப்புவார்! பூரண விசுவாசம் கொண்டவர்கள் மாத்திரமே, இதுபோன்ற தீர்மானம் எடுத்து தேவனுடைய கரத்தில் நிபந்தனை ஏதுமின்றி, தங்களை அவருடைய கரத்தில் ஒப்படைப்பார்கள்! இருதயத்தில் தீராத வாஞ்சையோடு* "**தூய ஆவியானவரே, என்னை நிரப்பும்.....**" *என வாஞ்சையோடு ஜெபித்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது ஒன்றே சிறந்த வழியாகும். இந்த நிலையில் அமர்ந்து, பொறுமையாய் கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களை பரிசுத்தாவியானவர் நிச்சயமாய் நிரப்புவார்!*

*இவ்வாறாகவே, எனது 19-வது வயதில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக தேவனுடைய சமூகத்தில் வீழ்ந்துகிடந்தேன்! என் வாஞ்சையைக் கண்ட ஆண்டவர், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் என்னை ஆட்கொண்டார்! அன்றைய ஊழிய குழுக்களிலிருந்த பலர், நான் பரிசுத்தாவி அபிஷேகம் பெற்றிட, என்னை மனுஷீக முயற்சிக்குள் இழுத்தனர்! நான் அவைகளை மறுத்து, தேவனுடைய கரத்தில் அடங்கியிருந்து அபிஷேகம் பெற்றேன்! அன்று முதல் இன்று வரை, என் கண்களுக்கு 'அபிஷேகம்' ஒன்று தவிர வேறுஎதுவும், எனக்கு முக்கியமானதாய் தோன்றவில்லை!*

*தேவன் என் மூலம் செய்திட்ட ஒவ்வொரு சிறிய பணிகள்கூட, நான் ஆவியில் நிறைந்து செய்த பணிகளாகவேயிருந்தது! இவ்விதமான ஊழியங்களே* **நித்திய ஆவியினால், நித்திய ஊழியங்களாய்,** *என்றென்றும் நிலைத்திருக்கும்! அவரது கரத்தில் பயன்பட்ட அந்த தாசர்கள்.... தேவனுக்குமுன் தங்களை வெறும் 'கருவிகளாகவே' சமர்ப்பித்து மகிழ்ந்திருந்தார்கள்! அவர்களது அந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணை* **தேவன் ஒருவர் தவிர**, *வேறெதுவும் இல்லை!*

*- A.W.டோசர்*

---

## தேவனையே நம்பியவனுக்கு, ஜெபம் ஓர் உயிர்நாடி!

*வேலை எவ்வளவு அதிகமோ, ஜெபம் அவ்வளவு அதிகம் வேண்டும்*

"ஜெபம் அவசியமில்லை, எல்லாம் கடவுள் விதித்ததுபோல் நடக்கும், நமது ஜெபத்தால் தேவ தீர்மானங்களை மாற்ற முடியுமா?" என்று பேசுகிறவர்கள் பலர்! இவர்கள் நம்மைப்பார்த்து: உணவு தாரும், உடை தாரும், நோய்கள் துன்பங்களை நீக்கும், மழை தாருமென்று பல காரியங்களை நீங்கள் கேட்டு தேவனிடம் வியாபாரம் பண்ணுகிறீர்கள் என்றும் சொல்லுகிறார்கள்! ஜெபத்தின் வல்லமையை அறிந்தவர்கள் இப்படிப் பேசமாட்டார்கள். இதைத்தாரும் அதைத்தாரும் என்று கேட்பதே ஜெபம் என்று நாம் சொல்லுகிறதில்லை. **'இருதயத்தின்' நிறைவிலிருந்து வாய் பேசுவதே ஜெபம்!** "பிதாவின் அன்பினால் நிறைந்த" திருக்குமாரன் தமது பிதாவோடு பேசாதிருப்பது எப்படி? பரத்தில் எக்காலமும் கூடயிருந்து சம்பாஷித்தவர், உலகத்துக்கு வந்தவுடன் சம்பாஷணையை நிறுத்தி விடுவாரோ? பிதா தமது குமாரனோடு கூடவே இருக்கும்போது, அவர் பேசாதிருக்க முடியுமா? பிதா குமாரனிடத்தில் பேசும்போது, குமாரன் பிதாவோடு பேசவேண்டாமா?

> **" ஆகையால், இதற்காக அதற்காக மாத்திரம் அவர் ஜெபிக்கிறவராயிராமல், அவர் ஜெபத்தில் மிகுதியான பாகம் "உறவாடும்" சம்பாஷணையாயிருந்தது என்றே அறிகிறோம்!**

இது, பிதா புத்திர சம்பந்தத்தால் உண்டான சம்பாஷணை! அருமையான சிநேகிதர் இருவர் அடிக்கடி சந்தித்துப் பேசுவது, ஒருவரிடத்திலிருந்து ஒருவர் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் மன்றாட்டாயிராமல், அவர்களின் சந்திப்பு 'அன்புக்கு அத்தாட்சியாகவே' இருக்கிறது!

இருப்பினும், நமக்குத் தேவையான காரியங்களுக்காக தேவனிடத்தில் கேட்பதும் ஜெபத்தின் மறுபக்கமாகும். ஆண்டவர்

*அவ்வாறான காரியங்களுக்காகவும் ஜெபித்தார்! இது அவருடைய மெய்யான பெலவீன மனுஷீகத்தை வெளிப்படுத்துகிறது. அவர் தமது சகோதரரைப்போல் 'சோதிக்கப்படும்' மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய மெய்யான மனுஷனாயிருந்தார்! தான் பிரவேசித்த உலகத்தில், மகா முக்கியமான காரியங்களை அவர் செய்யத் தொடங்குமுன், அவர் வெகுநேரம் ஜெபிப்பது வழக்கம்!*

*இயேசுவைப்போலவே, வேலையின் உத்தரவாதத்தை நாம் அதிகமாய் உணரும்போது, அந்த வேலைக்கு முன் ஜெபித்திட வேண்டும். அதேபோல், வேலை முடிந்தபின்பும் ஜெபிக்கும் பழக்கம் நமக்கு வேண்டும்!*

“

**வேலை அதிகம், ஆகையால் ஜெபிக்க நேரமில்லையென நாம் சொல்லலாம். நாம் ஜெபிக்க நேரமில்லை என்கிற காரணத்தையே, ஆண்டவர் தான் ஜெபிப்பதற்குக் காரணமாக்கினார்!**

*பிதாவே, எனக்கு உம் ஊழியபணி அதிகம் இருக்கிறது, ஆகையால் நான் அதிகமாய் ஜெபிக்க வேண்டும் என்றார்! நாம் பிரசங்கித்தபின் அல்லது ஒரு முக்கியமான வேலையை முடித்தபின், செய்த வேலையின் சிறப்பைப்பற்றிப் பேசுகிறோம். எல்லாம் நன்றாய் நடந்ததென்று நாம் பேசிக்கொள்வதே நமக்கு ஆறுதல்! ஆண்டவரோ, மகத்துவமான காரியங்களைச் செய்த பின்பு, தேவசமுகத்தில் தங்கியிருப்பதையே அதிகமாய் நாடினார்! வேலைக்கு முன் ஜெபம் எவ்வளவு அவசியமோ, வேலைக்குப்பின்னும் ஜெபம் அவ்வளவு அவசியம் என்பதை இயேசு தமக்குள் உணர்ந்திருந்தார். ஏனெனில்....*

“

**தாம் செய்த ஊழியத்தின் வழியாய் செலவான வல்லமையை, ஜெபத்தின் மூலமாய் திரும்ப நிரப்பினார்.**

*மேலும், ஊழியம் சிறப்பாக நடைபெற்றதால் 'நாம் பெருமை அடைந்து' அதனிமித்தம் சாத்தான் நம்மைத் தாக்குவதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது! ஆகவேதான் ஊழியத்திற்குப் பிறகும், நாம் பிதாவை சார்ந்து கொண்டு ஜெபித்திட அவசியமாய் இருக்கிறது!*

*கர்த்தர் தமது ஊழியர்களைப் பலப்படுத்தும் விதம் ஆச்சரியம்! நாம் எவ்வளவு வேலை செய்திருந்தாலும், இன்னும் அதிக வேலை செய்யக்கூடிய பலத்தை அவர் அருளுகிறார்! உண்மைதான், அவருடைய ஊழியத்தில் நமது பலமும் சத்துவமும் செலவாகும் போது, அவர் திரும்பவும் நம்மைப் புது பலத்தாலும் சத்துவத்தாலும் நிரப்புகிறார். இந்தப் பலத்தை, ஜெபத்தின் மூலமாகவே பெற்றுக்*

கொள்ளுகிறோம்! இவையெல்லாம் 'ஜெப ஜீவியத்தில்' நாம் அவரிடமிருந்து கற்றுக்கொண்ட இரகசியங்கள்!

கெத்சமனேயில் தனக்கு முன்னிருந்த பயங்கரமான போராட்டத்தை "அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்" செய்த ஜெபத்தால் மேற்கொண்டு பூரண வெற்றியடைந்தார். (எபி.5:7). **ஜெபிக்காதபடி தூங்கிக்கொண்டிருந்த** சீஷரோ, சோதனையால் மேற்கொள்ளப்பட்டு சிதறி, ஓடினர். ஜெபத்தால் மேற்கொள்ளக் கூடாத காரியமில்லை! ஜெபத்துக்கு தேவவல்லமை உண்டு. **ஏனென்றால் ஜெபத்தில் விசுவாசியல்ல, தேவனே கிரியை செய்கிறார்!**

பேதுரு சிறைச்சாலையில் அடைபட்டிருந்தபோது, **சபையாரின் ஊக்கமான ஜெபம்** அவர் கைகளில் கட்டியிருந்த சங்கிலிகள் கீழே விழவும், இருப்புத் தாழ்ப்பாள்கள் உடைந்து, இருப்புக் கதவுகள் திறவுண்டுபோகவும் செய்தது. அங்கே ஜெபித்தவர்கள் ஏழை விசுவாசிகள், கிரியை செய்தவரோ தேவன்! நமது ஊக்கமான ஜெபங்கள், இன்றும் ஆச்சரியமான காரியங்களை நடப்பிக்கின்றன! ஜெப ஜீவியம் இல்லாத கிறிஸ்தவனின் ஆவிக்குரிய மாளிகை, வளர்ச்சியின் பூரண வடிவு பெறுவது கடினம்!

- S.பரமானந்தம்

---

## 'கிறிஸ்துவின் ஜெயத்தை' கெம்பீரிக்கும் சபை!

*'கிறிஸ்துவின் ஜெயம்' சபையில் பாதுகாக்கப்பட வேண்டும்*

'அமர்ந்த' ஜீவியத்தில் ஆரம்பித்து, பின்பாக முன்னோக்கி 'நடந்து' செல்ல வேண்டும் என்பதோடு நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் நிறைவு பெறாமல், இந்த நிலையில் சென்று கொண்டிருக்கும் **ஒவ்வொரு கிறிஸ்தவனும், 'நிலை நிற்க வேண்டிய'** பாடத்தையும் கற்றுக்கொள்வதே நிறைவான கிறிஸ்தவ ஜீவியம்! முன்னேறி நடந்துவரும் ஒரு கிறிஸ்தவன், நிச்சயமாக அறிந்துகொள்ள வேண்டிய பகுதி என்னவென்றால், "ஒரு ஆவிக்குரிய போராட்டத்தை" தன் வாழ்வில் சந்திக்க அவன் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்பதுதான்! ஆகவே:

1) அவன், கிறிஸ்துவோடு உன்னதங்களில் **அமர்ந்திருக்க** அறிந்திருக்க வேண்டும்.

2) அதன்மூலமாய், அவருக்குப் பிரியமாய் இந்த உலகத்தில் எவ்வாறு **நடக்க வேண்டும்** என்பதையும் அறிந்திருக்க வேண்டும்!

3) சத்துருவை எதிர்கொள்ள வேண்டிய நேரத்தில், அவனை எவ்வாறு எதிர்த்து **நிற்கவேண்டும்** என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

இந்த யுத்தமே எபேசியர் 6:10-20 வசனங்களில் வாசிக்கிறோம். இதை பவுல் குறிப்பிட்டுச் சொல்லும்போது "பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு நமக்கு யுத்தம் உண்டு" என்றே குறிப்பிட்டு கூறினார் (எபே.6:12).

இப்படியொரு ஆவிக்குரிய யுத்தத்தின் பிரவேசம், **முதலாவதாக** ஒருவன் கிறிஸ்துவுக்குள் அமர்ந்திருக்கவும், அவர் நமக்காக செய்து முடித்த செயல்களை அறிந்தவனாயும் இருக்கவேண்டும்! **இதற்கு பின்புதான்,** அந்த கிறிஸ்தவன் பரிசுத்தஆவியின் பெலனை பெற்று, இந்த பூமியில் அவரைப் பின்பற்றி வாழ்ந்திடும் பரிசுத்தஜீவியம் சாத்தியமாக முடியும்! இப்படி வாழாத ஒரு கிறிஸ்தவன், ஆவிக்குரிய யுத்தத்திற்கு தகுதியற்றவனாகிறான். யுத்தத்திற்கு ஆயத்தமில்லாத ஒரு கிறிஸ்தவனை, சாத்தானும் அசட்டை செய்து புறக்கணித்து விடுவான்.

> **"**
> **ஆனால் "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலன் கொண்டவன் எவனோ" அவன் மாத்திரமே ஆவிக்குரிய யுத்தத்தில் நிற்பதற்கு முழு தகுதியையும் பெறுகிறான் (எபே. 6:10).**

தேவனுக்கு ஒரேயொரு எதிரி மாத்திரமே உண்டு! அவனுடைய அதிகாரத்திற்கு கீழாய் ஏராளமான பிசாசின் கூட்டங்கள் 'இந்த உலகத்தை பொல்லாங்கினால் ஆளுகை செய்து' அதன் மூலமாய், 'தேவனை' அவருடைய சொந்த ராஜ்ஜியத்திலிருந்தே தள்ளிவிட முயற்சிக்கிறான்! நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை "வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போராட்டம் உண்டு" என எபேசியர் 6:12-ம் வசனம் கூறிடும் வலிமையான செயலே, இன்று நடைபெறுகிறது!

*நாம் மனுஷீகமாய் காண்பதெல்லாம், நமக்கு விரோதமாய் இருக்கும் "மாம்சத்தையும், இரத்தத்தையும்" மாத்திரமே காண்கிறோம். அதாவது பகையை முன்வைத்து ஆளும் உலகத்தையும், பாவம் நிறைந்த ஜனங்களையும், பொல்லாப்பு உண்டாக்கும் ஜனங்களை மாத்திரமே காண்கிறோம்! ஆனால், இந்த சத்தியத்தை நமக்கு உரைத்த பவுல் உரைப்பது என்னவென்றால், நம்முடைய போராட்டம் இவைகளல்ல என முற்றுப்புள்ளி வைத்தார். நம்முடைய யுத்தமெல்லாம் 'பிசாசை குறி வைத்தே' இருக்கிறது. ஆகவே, "இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் மாத்திரமே நமக்கு போராட்டம் உண்டு" என அறிவோமாக!*

**"இரண்டு சிம்மாசன ஆளுமைக்கே யுத்தம் இருக்கிறது. பூச்சக்கரத்தை, கர்த்தரே ஆளுகை செய்கிறார்! ஆனால், கர்த்தருடைய ஆளுமையி லிருக்கும் அவரது சொந்தத்தை 'சாத்தானின் ஆளுமை' பறித்திட முயற்சி செய்கிறது!**

போராடும் தீமையான ஆளுமையை அகற்றுவதே சபையின் அழைப்பாயிருக்கிறது. இப்பிரபஞ்சத்திற்குரிய பிசாசை அகற்றி, கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய் முடிசூட்டும் ஊழியமே சபைக்கு உள்ளது! ஒரு சபை இவ்வாறாகத்தான் 'போரிட்டு' கிரியை செய்கிறதா? என்றே, அங்குள்ள மக்கள் உற்றுப் பார்ப்பது நலம்!

ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியம் தனிப்பட்ட விதத்தில், ஒரு போராட்டக்களமே ஆகும்! அதுபோலவே, கர்த்தர் நமக்கு ஒப்புவித்த ஊழியங்களை நிறைவேற்றுவதும் நமது விசேஷித்த பொறுப்பா யிருக்கிறது! நாம் காண்கின்றபடி, 'தேவனுடைய பிள்ளைகள் மீது' சாத்தான் நேரடியாய் வந்து தாக்குகிறான். கர்த்தர் அருளிய திவ்விய வசனங்களையும், கற்பனைகளையும் நாமே முறித்து, சாத்தானுக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது. ஆகவே தன்னுடைய சொந்த ஜீவியத்தில், காரியத்தைச் சீர்ப்படுத்தி வாழ்ந்திட ஒரு கிறிஸ்தவன் அறிந்திருக்க வேண்டும்! சத்துருவாகிய பிசாசு, சிறந்த பரிசுத்தவான் களையும் 'தீமையை முன் வைத்து' அவர்களின் மனதை சீர்குலைத்திட பலமாய் தாக்குதல் செய்கிறான்!

கிறிஸ்தவ ஜீவியத்தில், இன்னும் சில மக்கள், 'சாத்தான் அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை தாக்குதல் செய்கிறான்' என்ற உண்மையை இன்னமும் அறியாமலே இருக்கிறார்கள்! நாமோ, சத்துருவை அலட்சியமாய் எண்ணிவிட கூடாது. நாம் முதலாவதாக, உன்னதத்தில் வாசம் செய்யும் நம்முடைய ஸ்தானத்தை அறிந்து கொண்டோம்! அதன் பின்பு, இந்த உலகத்தில் கர்த்தரோடு இசைந்து நடந்து, அவருடைய ஜீவியத்தை வாழ்ந்திட நாள்தோறும் கற்றுக் கொண்டு வருகிறோம்! **இப்போதோ**, தேவனுக்கு விரோதியாயிருக்கும் சாத்தானை எதிர்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்துகிறோம். இதுவே 'நிற்பது' என்ற தேவவார்த்தையின் பொருளாகும்! அதாவது: "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு **எதிர்த்து நிற்க** திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்து கொள்ளுங்கள்" என்றே எபேசியர் **6:11**-ம் வசனம் போதிக்கிறது.

**"'நில்லுங்கள்' என்ற தேவனுடைய கட்டளை "உங்கள் சுதந்தர பூமியை இழந்து விடாதீர்கள்" என்பதே அர்த்தமாகும். அதற்காகவே**

**“தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் நாம் தரித்துக்கொள்ள” கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.**

*நாம் பெற்ற பூமியின் சுதந்திரம், மெய்யாகவே கர்த்தருடையதாய் இருந்தாலும், அதுவே இப்போது நமக்கும் சொந்தம்! எனவே, சத்துருவின் தந்திரமெல்லாம், நம்முடைய சுதந்திரத்தை பறிப்பதாகவே இருக்கிறது. ஆகையினால்தான், பெற்ற சுதந்திரத்தை நம்மோடு வைத்துக்கொள்ள, நாம் யுத்தம் செய்திட அவசியமாயிருக்கிறது!*

*யுத்தகளத்தில் குறிப்பிடப்பட்ட எல்லா ஆயுதங்களும், நம்மை தற்காத்துக் கொள்வதற்கே ஆகும். ‘உருவிய பட்டயம் மாத்திரமே’ நம்மை தற்காத்து கொள்வதற்கும், எதிர்த்துப் போராடுவதற்கும் அருளப்பட்டிருக்கிறது. எப்படியெனில், நாம் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை சத்துரு பறித்திட வரும் தருணத்தில் ‘அவனுடன் போரிடுவதற்கு’ மாத்திரமே பட்டயத்தை பயன்படுத்துகிறோம். ஆகவே ஆண்டவராகிய இயேசு நமக்கு முன்னோடியாய் சென்று போராடியதற்கும், நாம் இப்போது போராடுவதற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும்.*

**“இயேசு முன்சென்ற போர்களம் சாத்தானை ‘தாக்கும்’ போராய் இருந்தது! நமக்கோ, நம் சுதந்திரத்தை ‘பாதுகாத்திடும்’ போர்களமாய் இருக்கிறது!**

*ஆண்டவராகிய இயேசு, தான் சுமந்து சென்ற சிலுவையின் மூலமாய் நரகம்வரை சென்று போரிட்டார். அதன்மூலமாய் “அங்கு சிறைப்பட்டவர்களை சிறையாக்கி” உன்னதத்திற்கு ஜெயமாய் ஏறினார் (எபே.4:8,9). இவ்வாறு, கிறிஸ்து நமக்காக சம்பாதித்த ஜெயத்தை நம்மோடு வைத்துக் கொள்வதற்கே, நாம் சாத்தானை எதிர்த்துப் போரிடுகிறோம்.* **கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டு,** *சத்துருவாகிய சாத்தானை, தேவகுமாரன், அந்த இருளின் அதிபதியை ஜெயித்துவிட்டார்! என்ற யுத்தத்தின் ஜெயமான முடிவை, தேவன் நமக்கு அறிவித்து விட்டார்!*

*அவர் ஜெயித்த சுதந்திரத்தை கிறிஸ்து நமக்கே கொடுத்துவிட்டார். தேவன் அருளும் சுதந்திரத்தை பெறுவதற்கு நாம் இனி யுத்தம் செய்திட அவசியமில்லை! நாமோ, எந்த எதிர்ப்பு வந்தாலும் ‘சுதந்திரத்தை பற்றிக்கொண்டு வாழ்ந்தால்’ அது போதும்! அதுவே அல்லாமல் ‘தாக்குதலை’ நாம் செய்ய வேண்டிய அவசியமில்லை. இப்போது நாம் பெற்றிருக்கும் பாக்கியம், கிறிஸ்துவின் ராஜ்ஜிய சுதந்திரத்தை ‘முன் வைத்து’ முன்னேறிச் செல்வதே ஆகும்!*

*மனுஷகுமாரனாய் வந்த இயேசு கிறிஸ்துவுக்குள், தேவன் சகலத்தையும் செய்து முடித்து, ஜெயித்துவிட்டார்! அவர் அடைந்த ஜெயத்தை, நாம் பற்றிக் கொள்ளும்படியே தேவன் வழங்கியுள்ளார். சத்துருவின்மீது அவர் எடுத்த ஜெயம் "கிறிஸ்துவின் ராஜ்யத்திற்குள்" நிறைவேறிய உண்மையாகும்! எந்தவொரு சபை 'பாதாளம் மேற் கொள்ளாத' சபையாய், சாத்தானை தோற்கடிக்கும் சபையாய் நிலைநிற்கிறதோ, அது மாத்திரமே கிறிஸ்துவின் சபையாய் நிலை நிற்கும்படி, தேசத்தில் ஆங்காங்கு சாட்சியாய் தன் சபையை வைத்திருக்கிறார். இந்த பூமியில் கிறிஸ்துவின் சபை நிலைத்திருக்கும் முடிவுவரை, சாத்தான் தன்னாலான சகல சத்துவங்களையும் கொண்டு 'சபையின் ஆசீர்வதிக்கப்பட்ட ஸ்தானத்திலிருந்து' வீழ்ச்சியடையும்படி சபையை தாக்கிக்கொண்டுதான் இருப்பான்! ஆனால் நாமோ, அல்லது அந்த உத்தமமான சபையோ 'பூமியை சுதந்தரிப்பதற்காக' போராடுவது இல்லை! அது ஏனென்றால் 'அச்செயல்' ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் நிறைவேறிவிட்டபடியால், அந்த ஜெயத்திற்கு இப்போது நாமே சுதந்திரவாளிகளாய் இருக்கிறோம்! இதை வலியுறுத்தி, மிகுந்த ஆச்சரியமாய் கூறும் வசனம் என்னவென்றால்: "நாம் நம்மில் அன்புகூருகிறவராலே,* **முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய்** *இருக்கிறோம்!" (ரோமர் 8:37). இப்போதோ, ஜெயம் பெற்ற கிறிஸ்துவுக்குள் நாம் நிற்கவேண்டியது மாத்திரமே மிகுந்த அவசியமாயிருக்கிறது! நாம் நிற்கிறோமென்று சொல்வது, அவருக்குள் நிலைநிற்கும் ஜெயமே ஆகும்! இந்த ஜெயமே, உத்தம சபைக்குரிய முத்திரையாயிருக்கிறது! ஆமென்.*

*- வாட்ச்மென் நீ*

---

## "பண விஷயத்தில் உத்தமம்" தேவனுக்குப் பிரியம்!

*'கொடுப்பதிலும்' புனிதம் வேண்டும்*

**தே**வன் ஒருபோதும் 'ஒரு நபரை விட' அந்த நபருக்குரியதை பிரதானமாய் கேட்பதில்லை! ஒரு மனுஷன் தேவனுடைய சித்தம் செய்ய மறுத்து 'தன் காணிக்கை மூலமாய்' தேவனைப் பிரியப்படுத்தி விடலாம் என எண்ணும் தவறு, அன்று *காயீன்* முதல் இன்றுவரை சம்பவித்து வருகிறது. **நம் ஜீவியமே தேவனுக்கு உகந்த 'சுத்தமான காணிக்கை'** என மல்கியா 1:11 கூறுவதை மறந்து விடாதிருங்கள். ஆகவே தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாக இருப்ப தெல்லாம் "நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனை பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டும்".

மேலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றப்படி “வேசித்தனமும், பொருளாசையும், வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும்.... ஆகிய தகாதவைகள்” தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையை அசுசிப்படுத்தும் என்பதை அறிந்து, பொறுப்புடன் வாழ்வதே ‘சுகந்தமான காணிக்கையின்’ அஸ்திபாரமாகும்(எபே.5:1-4). எனவே தான், “நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்!” என 2கொரிந்தியர் 12:14 வசனம் கோடிட்டு கூறுவதை கவனியுங்கள். இவ்வாறு “தேவனுக்கு உகந்த காணிக்கையாய்” வாழ்வது உங்களுக்கும், உங்கள் ஊழியருக்கும், உங்கள் சபைக்கும் ஆகிய அனைவருக்கும் முக்கிய பொறுப்பாகும்.

ஜீவிய உத்தமத்தை சார்ந்தே, கொடுப்பவனின் தரத்தை தேவன் நிர்ணயம் செய்கிறார்! ஆகவேதான், அரசுக்கு வரிக்கொடுக்கிறதைப் பற்றி கேள்வி உண்டானபோது, “இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்” என இயேசு கூறினார் (மத்.22:21). இன்று தசமபாகம் கொடுப்பது குறித்து ஏராளமான போதனைகள் இருந்தபோதிலும் “நியாயமாய் வரிசெலுத்துவதைப் பற்றி” இன்றுள்ள பிரசங்கிகள் வலியுறுத்தாமல் இருப்பது ஏன்?

> “ **இயேசுவோ, அல்லது அப்போஸ்தலரோ தசமபாகம் குறித்து ஒருமுறை கூட போதிக்கவில்லை! இன்றுள்ள பிரசங்கிகளுக்கோ தசமபாகம் பற்றி போதிப்பது அவர்களின் ‘பிரியமான உபதேசமாய்’ மாறி விட்டது!**

இவ்வாறாகவே ‘கிறிஸ்தவத்தின் முதலாவது முக்கியத்துவம்’ இன்றைய கிறிஸ்தவத்தில் அதிகமாய் சரிந்து கிடக்கிறது. அநீதியாக வாழும் கருப்புப்பணத்தை, காணிக்கைப் பெட்டியில் போடுவதால் ‘வெள்ளை’ ஆகிவிட முடியாது! அந்தப் பணத்தை தேவன் தமது கணக்கில் ஏற்றுவதில்லை! ‘வரிப்பணம் அரசுக்கு சேரவேண்டுமென தேவனுக்குத் தெரியும்’....பிசாசுக்கும் அது தெரியும்! ஆகவே, அநீதியான பணத்தை தேவன் ஏற்றுக்கொண்டால், பிசாசு குற்றஞ்சாட்டுவான்! என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ளுங்கள்.

எவ்வளவு “கொடுக்கிறோம்” என்பதை இன்றைய கிறிஸ்தவ உலகம் பாராட்டுகிறது. ஆனால் எவ்வளவு “வைத்துக் கொள்கிறோம்” என்பதையே உன்னதர் இயேசு பார்க்கிறார் (மாற்கு 12:41-44). ஆகவே தான், “ஐசுவரியமுள்ளவர்கள், **கொடுப்பதிலும் ஐசுவரியவான்களாக** வேண்டும்” என வேதம் எடுத்துரைக்கிறது (1தீமோ.6:17-19). மிகுந்த ஏழ்மையான ஜனங்களும், பத்தில் ஒரு பங்கு (தசமபாகம்) கொடுப்பதற்கு வேதம் உற்சாகப்படுத்துகிறது. ஆனால் அந்த வறுமை நிலையி

*லிருந்து மேலான ஆசீர்வாதம் பெற்றவர்கள், இனிமுதற்கொண்டு பத்தில் ஒரு பங்கு இல்லாமல், பத்தில் இரண்டு பங்காக.... மூன்று பங்காக ஏன் உயர்த்திட கூடாது? அதை இயேசு குறிப்பிட்டு அந்த ஏழைபோட்ட காணிக்கை 100% என்றும், செல்வந்தர் போட்ட காணிக்கை 10%-மாய் இருந்ததை ஒப்பிட்டு ஆச்சரியப்பட்டார்! "அந்த ஐசுவரியவான்கள் தங்களுக்கு வைத்துக் கொண்டதையே" இயேசு அறிந்திருந்தார்! ஆகவே தசமபாகத்தில் துவங்கியவர்கள், அதில் மாத்திரம் நின்றுவிடாமல், அந்த "பத்தில் ஒன்று" "பத்திற்குப் பத்தாக" வளர்வதையே புதிய ஏற்பாடு மேன்மைப்படுத்தி கூறுகிறது!*

> ***தே**வனுடைய எந்த பிரமாணமும் யாதொருவர் மீதும் அழுத்தங்களையோ, அல்லது கட்டாயத்தையோ திணிப்பதில்லை. ஆகவே தான், அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில் தசமபாகம் குறித்து போதிக்கவில்லை. அது ஏனென்றால், புதிய ஏற்பாட்டில் இன்று "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் 'மகிழ்ச்சியுடன்' நியமித்தபடியே.... உற்சாகமாய் கொடுக்கக் கடவன்!" என்றே (புதிய உடன்படிக்கையின் உத்தரவாதத்தோடு) பிரசங்கித்தார்கள் (2கொரி **9:7**).*

"

> **ஏனென்றால், இன்று தேவனை நம் சொந்த தகப்பனாய் கொண்டிருக்கிற நாம், அவருடைய புத்திரராய் இருக்கிறபடியால் இனி சட்டமல்ல, உற்சாகமான அன்பில் மனப்பூர்வமாய் கொடுப்பதே நாம் பெற்ற மேன்மையாய் இருக்கிறது!**

*ஆகவே, ஒரு ஊழியனோ அல்லது ஒரு சபையோ 'கொடுப்பதைக் குறித்து' போதிப்பது ஒன்றே அவர்களின் கடமை. அதற்குப் பதிலாக, "தாங்கள் சுயமாய் போடும் திட்டங்களுக்காக பணம் திரட்டும் ஆர்வத்திற்கு" முற்றுப்புள்ளி வைத்த ஊழியன், கர்த்தருக்குள் வாழ்வான்! அதுபோன்ற சபை, கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்!*

***தே**வனுடைய அழைப்பைப் பெற்று, கர்த்தருக்கு ஊழியம் செய்ய வந்த எந்த ஊழியக்காரனும் "தேவனுக்கும், பணத்திற்கும்" சேர்த்து ஊழியம் செய்திட ஒருக்காலும் அவர்களால் முடியாது! (லூக்கா **16:13**) என்றே இயேசு திட்டவட்டமாய் கூறினார்.*

"

> **அந்நாட்களில் வாழ்ந்த அப்போஸ்தலர்கள் ஏராளமான பணத்தை புழங்கினாலும்.... அது, அவர்களுடைய பாதத்தின் கீழ்தான் வைக்கப் பட்டது என்பதை அறியுங்கள் (அப். 4:34-37).**

*அதுஏனென்றால், ஊழியத்திற்குரிய எந்த பணவிஷயத்திலும்,*

*அதைக்குறித்து ஒருவராகிலும் எங்களை குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்தோம் என 2கொரி.8:20-ம் வசனத்தில் பவுல் கூறினார். மேலும் அவர் கூறும்போது "கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளையே செய்ய நாடுகிறோம்" என தொடர்ந்து அடுத்த வசனத்தில் கூறினார்! இதைக் குறித்து* **பண்டிதர் பில்லிகிரஹாம்** *கூறும்போது: "பண விஷயத்தில் நம் மனப்பான்மை சரியாகிவிட்டால், வாழ்வின் மற்ற பகுதிகள் யாவும் செம்மையாகிவிடும்" எனக்கூறினார்.*

*இன்றுள்ள கிறிஸ்தவ உலகில், அதிகமான காணிக்கை கொடுத்து ஊழியர்களை தங்கள் வசப்படுத்த முயற்சித்திடும் அவலங்கள் ஏராளம் இருக்கிறது! அவ்வாறு காணிக்கை பணத்தை முன்வைத்து, பிரசங்கி மாரை தன்வசப்படுத்த முயலும் செயல், தேவனுக்கு விரோதமான பாவமாகும்! ஒருமுறை, சீமோன் என்ற மனந்திரும்பிய ஓர் மாய வித்தைக்காரன் '*__பணத்தை கொண்டு வந்து கொடுத்து__*' பேதுரு மூலமாய் வரங்களைப் பெற்று விடலாமென்று எண்ணினான்! அதுபோன்ற அவனுடைய நினைவை, பேதுரு கடிந்துகொண்டு "உன் பணம் உன்னோடேகூட நாசமாய் போகக்கடவது" என கடிந்து, நீ தேவனிடத்தில் மனந்திரும்புவாயாக! என்ற புத்தியையும் மிகுந்த கண்டிப்புடன் பேசினார் (அப்.8:17-24).*

> **"மேலும், கர்த்தருக்கு கொடுப்பதைப் போல் கொடுத்துவிட்டு 'அதைத் தாங்கள் கொடுத்ததாக' மக்கள் மனதில் பதியவைப்பதற்கு இன்று ஏராளமான கிறிஸ்தவர்கள் முயற்சித்து நிலைநாட்டுகிறார்கள்!**

*எங்கள் BYM இயக்கத்தின் தலைமை கட்டிடம், துணை கட்டிடம், மிஷனரி இல்லங்கள் போன்ற பல்வேறு ஊழியங்களுக்கு காணிக்கை கொடுத்தவர்களில், ஒருவருடைய புகைப்படத்தையோ அல்லது பெயரையோ நாங்கள் நிலைநிறுத்தியதில்லை. அவ்வாறு நாங்கள் நடந்து கொண்ட பொறுப்பு, இயேசு போதித்த 'கொடுத்தலை' குறித்த மிக உன்னதமான உபதேசமாகும்!*

*அப்படியானால், இவைகளெல்லாம் உங்களுக்கு எப்படி வந்தது? எனக் கேட்டவர்களுக்கு நாங்கள் கூறும் பதில் என்னவென்றால் "...* **அவரது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்ல**" *என்ற எபிரெயர் 6:10 வசனமே, எங்கள் பதிலாய் இருக்கிறது!*

*ஆகவே, பணத்தை மாத்திரமே தேவனுக்கு கொடுத்துவிட்டோம் என எண்ணுவது முற்றிலும் தவறு! 1நாளா.29:12-14 வசனங்கள்*

*கூறுகிறபடி "....***எல்லாம் உம்மால் உண்டானது!** *உமது கரத்திலே வாங்கி, உமக்கே கொடுத்தோம்" என்ற வசனம், மிகுந்த சவாலுக்குரியது. மிதமிஞ்சி 'எல்லாம் கொடுப்பது' தேவன் ஒருவரால் மாத்திரமே முடியும்! ஆம், நம்மில் ஒருவருக்கும் தேவன் கடனாளியல்ல!*

*கொடுக்கும் விஷயத்தில் அடங்கியிருக்கும், மெய்சிலிர்க்கச் செய்யும் சத்தியம் என்னவென்றால் "***நான் கொடுப்பதை சர்வ வல்ல தேவன் வாங்குகிறார்**" *என்பதேயாகும். கொடுப்பவர்களுக்கு அவர் தரும் 'பலன்களை விட' இதுவே தேவத்துவத்தின் மகிமையான விசேஷம்! உண்மைதான் "கொடுத்த என்னையே அவர் தமதாக்கி, வாங்கிக் கொண்டார்!" என்ற மேன்மையான விசேஷம்! ஆகவேதான், அப்போஸ்தலர் 20:35-ம் வசனத்தையே மனநிறைவோடு முடிவுரையாய் கூற விரும்புகிறோம்: "வாங்குகிறதை பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்!" என்ற கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தையை நம் மனதில் வைத்து, நினைவுகூர்வோமாக!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## என்னை ஆளும் இயேசுநாதா!

*தேவ ராஜ்ஜியமே நமது அரசாங்கம்*

*ஆண்டவர் இயேசு "உயிர்த்தெழுந்தார்,* **அவர் இங்கே இல்லை!**" *என்றே மாற்கு 16:6-ம் வசனம் கெம்பீரமாய் கூறுகிறது. இயேசு தன் சீஷர்களுக்காக பிதாவிடம் மன்றாடிய, கடைசி ஜெபத்திலும் "இனி நான் உலகத்திலிரேன்!" என்றே குறிப்பிட்டார் (யோவான் 17:11). இந்த உலகம் இயேசுவை பகைத்து, அவரை சிலுவையிலறைந்தது! அவரோ அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, உயிர்த்தெழுந்து, இப்போதோ,* **தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில்** *வீற்றிருக்கிறார் என்றே எபிரெயர் 12:2 கூறுகிறது.*

> "
> **இயேசு உயிர்த்தெழுந்து அமர்ந்த தேவனுடைய சிங்காசனம் இந்த உலக ராஜ்யத்தின் எந்த சிங்காசனத்தைப் பார்க்கிலும் மகா உன்னத, உயர்ந்த சிங்காசனமாகும்!**

*அது அமெரிக்க தேசமானாலும், இந்திய தேசமானாலும் அல்லது தமிழகம் போன்ற எந்த மாநில தேசமானாலும், அதற்கெல்லாம் மேலான தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்! (எபி.12:2). ஆகவே, இந்த பூமியில் "இராயனுக்குரியதை இராயனுக்கு செலுத்துவதேயல்லாமல்"* **நாம் முற்றிலும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கே சொந்தமானவர்கள்!** *என இயேசு போதித்தார்! இரட்சகராகிய*

*இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் பெற்றுக்கொண்ட முதல் செய்தியே "மனந்திரும்புங்கள்,* **பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது"** *என்பதுதான். அதுபோலவே தன் சீஷர்களுக்கு அவர் அறிவித்த முதலாவது செய்தியும், "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்,* **பரலோகராஜ்யம் அவர்களுடையது"** *என்ற செய்திதான்!*

*நாசரேத்தூரானாகிய இயேசு வாழ்ந்து, மரித்து, உயிர்த்த பிறகும் கூட இயேசுவின் சீஷர்களில் சிலர் 'தேவராஜ்யத்தின் மேன்மையை' அறியாதிருந்தார்கள். எம்மாவூர் சீஷர்களாயிருந்த அவர்கள் 'தங்கள் கண்களுக்கு மறைவாயிருந்த' இயேசுவிடம், அவரை ஒரு 'வழிப்போக்கனாக' எண்ணி சம்பாஷித்தார்கள்! அவர்கள் மிகுந்த ஆதங்கப்பட்டு அவரிடம் சொன்ன செய்தி என்ன வென்றால் "***அவர் இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர்*** *" என்றே நாங்கள் நம்பியிருந்தோம் எனக்கூறினார்கள்.*

*அது ஏனென்றால் இயேசு வாழ்ந்து, மரித்து, உயிர்த்த காலம்வரை, இஸ்ரவேலை 'ரோமானிய அரசுதான்' ஆண்டுவந்தது! பல்வேறு தேவதைகளை சிலை வைத்து வணங்கி வந்த அவர்களிடமிருந்து, இஸ்ரவேலை மீட்டெடுக்கும் தலைவராக, இயேசுவை தாங்கள் நம்பியிருந்ததாகவே 'அவரிடம்' கூறினார்கள்! (லூக்கா. 24:21).*

*அந்த சீஷர்களை 'புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்கள்' என இயேசு கடிந்துகொண்டு "கிறிஸ்து இவ்விதமாக பாடுபட்டு, தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?" என சொல்லி மோசே முதல் இன்றுவரை சகல வேத வாக்கியங்களும் தன்னைக் குறித்து சொல்லியவைகளை விவரித்து காண்பித்தார்! இந்த புறமதஸ்த லோகராஜ்யமல்ல, இப்போது நாமே அவர் ஆள விரும்பும் தேவ ராஜ்யம் என விளங்கிக்கொண்ட அந்த தருணத்தில், 'அவர்களை விட்டு அப்புறம் போகிறவர்போல்' இயேசு காண்பித்தார்!*

> **" பூளோக ரீதியான இஸ்ரவேல் தேசத்தை, ஏன் இயேசு மீட்டு கொள்ளவில்லை? என ஆரம்பத்தில் கேள்வி கேட்ட அந்த சீஷர்கள், இப்போது அவரை நோக்கி "நீர் எங்களுடனே தங்கியிரும், இருள் வந்துவிட்டது" என வருந்தி கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டிக்கொண்டபடியே "அவர், அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்"என வாசிக்கிறோம் (லூக்கா. 24:28-30).**

*இயேசு அவர்களோடு பந்தியிருந்து அப்பத்தை பிட்டு அவர்களுக்கு கொடுத்தார். அப்போதுதான், இந்த உலகத்தில் நாம் சிலுவையின் வழியாக பாடுபட்டு மகிமையில் பிரவேசிக்கும் சத்தியத்தைக் காண,*

*அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள்! வெளித்தோற்றத்தில் அவர் மறைந்தாலும், அவர் கூறியபடி "**அவர்களுடனே நிரந்தரமாய் தங்கியிருக்கும்**" சிலுவையின் வழியை காணும்படி செய்துவிட்டார். அதுமுதற்கொண்டு, "இஸ்ரவேலை மீட்டு, இயேசு ரட்சிக்கவில்லையே!" என குமுறிய சீஷர்களுடைய இருதயம், இப்போது கொழுந்துவிட்டு எரிந்ததை, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு பேரானந்தம் அடைந்தார்கள் (வசனம் 30-32).*

இயேசு, ரோமானிய ராயனுக்குரிய (Caesar) அரசாங்கத்தில் இருந்ததால், ரோமானிய கவர்னர் *பிலாத்து* இயேசுவைப் பார்த்து "உன்னைச் சிலுவையிலறைய **எனக்கு அதிகாரம் உண்டு!** உன்னை விடுதலை பண்ணவும் **எனக்கு அதிகாரம் உண்டு!** இது உனக்குத் தெரியாதா?" எனக்கேட்டார். அதற்கு இயேசு கூறிய ஆச்சரியமான பதில் என்னவென்றால், "பரத்திலிருந்து உமக்கு அதிகாரம் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது!" (யோவான் 19:10,11) என்றே கெம்பீரித்தார். அதுவே நமக்கும் நற்செய்தியாயிருக்கிறது!

இயேசு உயிர்த்தெழுந்து அமர்ந்த **தேவ சிங்காசனமே சகலத்தையும் ஆளுகை செய்கிறது** என்ற நற்செய்தி உடையவர்களாய், நாம் அனைவரும் அவருடைய ஆளுகையில் பூரண மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடக்கடவோம். நம் ஜெபமெல்லாம் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே.... எங்களைத் தீமையினின்று இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்" என்பதேயாகும் (மத்தேயு 6:9-13). ஏசாயா 9:6 வசனம் கூறுகிறபடி இன்றும், என்றும், மெய்யாகவே "ஆளுகை செய்யும் அரசாங்கம் கர்த்தருடைய தோளின்மேல் இருக்கிறது" என அறிந்து மகிழ்ந்திடக்கடவோம்!

"சீயோன் குமாரத்தியே பயப்படாதே! உன்னை ஆளும் **உன் ராஜா** உன்னிடத்தில் இருக்கிறார்!" (யோவான் 12:14) என ரீங்கரிக்கும் 'உயிருள்ள ஜீவ வார்த்தை' நம் உள்ளத்தில் தங்கியிருப்பதாக!

ஆம், இயேசுவைப்போலவே 'உலக ராஜ்ஜியத்திற்கு அல்ல' தேவ ராஜ்ஜியத்திற்கே நாம் சொந்தம்! இயேசு 'ரோமானி அரசின் கீழாக இருந்தாலும்' அவரோ, தேவ ராஜ்ஜிய அதிகாரத்திற்கு கீழாகவே ஜீவித்து, நமக்கு மாதிரியை வைத்துச் சென்றுள்ளார்! ஆமென்.

- *T.ரத்தினகுமார்*



## ‘தெய்வ அன்பின் தியானத்தை’ பாமாலை எழுதி தந்தவர்!

# “எலிசபெத் ரோவே!”

இங்கிலாந்து தேசத்திலுள்ள ‘இல்டெஸ்டர்’ ஊரில் பிறந்தவர் ‘எலிசபெத் ரோவே’ (Elizabeth Rowe) அம்மையார்! அவருடைய தகப்பனார் **உலக சமரசம் மறுக்கும் சபையின்** ஊழியராய் இருந்தார். தேவனோடு வைத்திருக்கும் தன்னுடைய உறவை, கவிதை மூலமாய் 12-வயதிலிருந்தே எழுதத் தொடங்கினார். தன் நேசரோடு கொண்ட உறவின் காவியம், “சிறு பிராயத்திலிருந்து முழு ஜீவியம் வரை” அனல்கொண்ட களஞ்சியமாயிருக்கிறது. அவர் எழுதிய பாமாலை பாடல்கள், அவரது இருதய உணர்வுகளை அப்படியே பிரதிபலிப்பதாய் இருந்தன. அவருடைய சிறந்த ஆவிக்குரிய நண்பர்கள் வலியுறுத்தி கூறியபடியால், தான் எழுதிய பாமாலைகளை ஒரு புத்தகமாக வெளியிட்டார். 1710-ம் ஆண்டு ‘தாமஸ் ரோவே’ அவர்களை திருமணம் செய்தார். தன் 5-வருட தாம்பத்திய ஜீவியத்தில், தன் இளம் கணவனை இழந்தார். **தன் கணவர் மீது கொண்ட நேசத்தை “மரணம் பிரித்திடாத சிநேகம்” என்ற மிக அருமையான புத்தகத்தை எழுதினார்.** தன் இளம் வயது விதவைத் தன்மையை மனதார ஏற்றுக்கொண்டு, லண்டனிலிருந்து ‘புரோம்’ என்ற இடத்திற்கு மாறி தன் தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கையை கர்த்தருக்கே அர்ப்பணித்தார்! தேவனுடைய அன்பை பிரகாசிக்கும் இனிமையான பாமாலைகளை, தன் ஜீவியத்தை தொடர்புபடுத்தி தியானப் பாடல்களாய் எழுதினார்!

1737-ம் ஆண்டு, தன் மரணத்தை நெருங்கிய சமயம் ‘ஐசக் வாட்ஸ்’ என்ற தன் ஆவிக்குரிய நண்பரிடம், தான் எழுதிய பாமாலை பாடல்களை ‘பிழைதிருத்தி’ பிரசுரிக்க முடியுமா என கேட்டுக் கொண்டார். அவர் எடுத்து கொண்ட முயற்சியால் வெளி வந்த புத்தகம் தான் **“இருதயத்தில் பக்தி பயிற்சி”** என்ற புத்தகமாகும். இவ்வாறு தேர்ந்தெடுத்து பிரசுரிக்கப்பட்ட அந்தப் புத்தகம், தெய்வ அன்பை பன்மடங்கு கொழுந்திட்டு எரியச் செய்த தீபமாய் இன்றும் விளங்குகிறது!

அவர் எழுதிய பாமாலை வரிகளில் சில: “ஓ தேவா, என் இருதயம் உம்மையே அடைக்கலமாய் பற்றிக்கொண்டது. அதுவே, இடைவிடாது பாய்ந்திடும் அருவியாய் எனக்கு ஆறுதலைத் தருகிறது. உம்மைத் தவிர வேறொரு மகிழ்ச்சியை என் இருதயத்தில் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன். அதன் விளைவாய், நான் ஆனந்தம் கொள்கிறேன்! உம்மால் ஆசீர்வதிக்கப்படுகிறேன்! ஜெயம் பெறுகிறேன்! அளவில்லா உம் மகிமையின் ஆளுகைக்குள் மகிழ்ந்து வாழ்கிறேன்! என தன் கவிதையில் எழுதியிருந்தார். மேலும், உம்முடைய சர்வ வல்ல ஆளுகையின் கரத்தில் முற்றிலும் ஒப்புக்கொடுத்த ‘சிறு குருவி’ நான்! இந்த உலகை விட்டு நான் உம்மண்டை சேரும்போது, உம்முடைய இராஜ்ஜியத்துக்காகவும், உம்முடைய மகிமைக்காகவும் சுடர்விட்டு வாழ்ந்த ஏராளமான ஊழிய பரிசுத்தவான்களோடு, சீக்கிரமாய் அகமகிழ்ந்திட காத்திருக்கிறேன்!”.

இவ்வாறு அநேக பக்தியான பாமாலைகளை, கட்டுக்கடங்காத மகிழ்ச்சியோடு கிறிஸ்துவை பாடி, அவைகளைப் பிரசுரித்து மகிழ்ந்து, தெய்வ உறவில் வாழ்ந்து, மரித்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## 'ஹிட்லர்' மனந்திரும்பியிருந்தாலும், இயேசு அவனை இரட்சித்திருப்பார்!

இந்த உலகில், மாபெரும் கொடும் தீயசெயலைப் புரிந்த மனிதன் ஜெர்மனி தேசத்தின் ஹிட்லர் என்ற கொலை பாதகன்! சிறியோர், பெரியோர், வாலிபர், குழந்தைகள், விருத்தாப்பியர் என்ற அனைத்துப் பிரிவினரும் அடங்கிய 60லட்சம் பாவமறியா அப்பாவி யூத மக்களை அந்த பஞ்சமா பாதகன் விஷ வாயு உலைகளில் தள்ளி, எரித்து சாம்பல் தூள் ஆக்கினான்! அந்தக் கொடியவன் கூட தனது பாதகச் செயலுக்காக தனது வாழ்வின் இறுதி மணி நேரத்தில் மனங்கசந்து அழுது புலம்பி, மார்பில் அடித்து தேவனிடம் மன்னிப்புக்காக கதறியிருந்தால், திரளான பாவங்களை மூடும் அன்பின் கருணாகரன் இயேசுகிறிஸ்து அவனது பாவங்களையும் மன்னித்து, அவனுக்கும் மோட்ச பாக்கியம் அளித்திருப்பார்! அதுதான், இயேசு இரட்சகரின் கல்வாரி அன்பின், கிறிஸ்தவ மார்க்கம்!

தேவன் அன்பாகவே இருக்கின்றார் என்று பரிசுத்த யோவான் அப்போஸ்தலன் எழுதினார் (1யோவான் 4:8). தேவனின் முழு உருவமே அன்புதான்! அந்த அன்பு திரளான பாவங்களை மூடும் (1பேதுரு 4:8) என்று, பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிடுகின்றார். ஆங்கில வேதாகமத்தில் "திரளான" என்ற வார்த்தைக்கு "மல்ட்டிடியூட்" (Multitude) அதாவது "பெரும் எண்ணிக்கை"என்பதாக உபயோகிக்கப்பட்டுள்ளது. அந்த பெரும் எண்ணிக்கைக்கு முன்பாக 100 மற்றும் 200 எல்லாம் நெருங்கி நிற்க முடியாது. "நம்முடைய பாவங்களை நாம் தேவனுக்கு அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோவான் 1:9) என்ற தேவ வசனத்தில் "எல்லா அநியாயம்" என்ற வார்த்தையில் நமது அனைத்துப் பாவங்களும் அடங்கி விடுகின்றன! இயேசு வழங்கிய இந்த அன்பின் சுவிசேஷத்தை, ஓ வாலிபனே உன் மனதார ஏற்று, இரட்சிக்கப்படுவாயாக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

maduraichristianfellowship
@indianbk